இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 258 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 16 – புதன்கிழமை 29 ஏப்ரல் 2026 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 258 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 16 - Wednesday 29 April 2026 - Chennai 8 Pages ₹ 5.00

### ‘திராவிட மாடல்’ ஆட்சியில் தொடர்ந்து இரண்டாண்டுகளாக இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி!

# தமிழ்நாடு என்றாலே சாதனை! சாதனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஏப். 29 -**

**பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாட்டின் ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடர்ந்து இரண்டாம் ஆண்டிலும் இரட்டை இலக்கினை (10.83%) பெற்று சாதனை படைத்துள்ளது.**

**இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள எக்ஸ் வலைதளப் பக்கத்தில்,, “தமிழ்நாடு என்றாலே சாதனை! சாதனை! சாதனை!” என்று குறிப்பிட்டுள்ளார். “உங்களின் துணையோடு இன்னும் பல உயரங்களை தமிழ்நாடு அடைவது உறுதி” என்றும் பதிவிட்டுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

**இதுகுறித்து ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் வெளியான செய்திக் கட்டுரையையும் அதில் இணைத்துள்ளார்.**

‘தி இந்து’வில் வெளியான செய்திக் கட்டுரையின் தமிழாக்கம் வருமாறு :-

தமிழ்நாடு மீண்டும் இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் சமீபத்தில் வெளியிட்ட தரவுகளின்படி, 2025-26 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு மாநிலம் 10.83% பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது.

தமிழ்நாடு, தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, 2025-26 ஆம் ஆண்டிற்கான 10.83% என்ற இரட்டை இலக்க உண்மையான பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பதிவுசெய்துள்ளதுகுறிப்பிடத்தக்கது.

2024-25 ஆம் ஆண்டில் இது 11.19 சதவீதமாக இருந்தது. மீண்டும், உத்தரப் பிரதேசம், பஞ்சாப் மற்றும் கேரளா உள்ளிட்ட 11 மாநிலங்கள் மற்றும் நான்கு யூனியன் பிரதேசங்களுக்கான தரவுகளை ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் இன்னும் வெளியிடவில்லை என்றாலும், 2025-26 ஆம் ஆண்டுக்கான இந்த எண்ணிக்கை எந்தவொரு மாநிலத்திற்கும் மிக உயர்ந்ததாக இருக்கலாம்.



தேசிய சராசரி வளர்ச்சி விகிதத்தில் ஏற்பட்டுள்ள செயல்பாடு, 7.4% என்ற விகிதத்தை (அடிப்படை ஆண்டு: 2011-12) தமிழ்நாடு “கணிசமாக மிஞ்சியுள்ளது”. தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகள் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ள மாநிலத்தின் வளர்ச்சிப் பாதை, “ஒரு வலுவான கொள்கைக் கட்டமைப்பு, மீள்திறன் கொண்ட தொழில்துறை அடித்தளம், உறுதியான உள்கட்டமைப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய, நிலையான வளர்ச்சிக்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பு” ஆகியவற்றை பிரதிபலிக்கிறது என்கிறார் மெட்ராஸ் பொருளியல் பள்ளியின் முன்னாள் இயக்குநரும், தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆலோசகருமான கே.ஆர். சண்முகம்.

ஐந்தாண்டு காலப்பகுதியில் (2021-22 முதல் 2025-26 வரை), மாநிலம் ஆண்டுக்குச் சராசரியாக 9.07% வளர்ச்சி விகிதத்தை எட்டியுள்ளது. இது, முந்தைய ஐந்தாண்டு சராசரியான 5.21% (2016-17 முதல் 2020-21 வரை) வளர்ச்சியை விட 3.86 சதவீதப் புள்ளிகள் “கணிசமான முன்னேற்றம்” என்பதையும், கோவிட்19க்கு முந்தைய சராசரி வளர்ச்சியான 7.18% (2014-15 முதல் 2018-19 வரை) வளர்ச்சியை விட 1.89 சதவீதப் புள்ளிகள் அதிகம் என்பதையும் குறிக்கிறது எனவும் டாக்டர் கே.ஆர். சண்முகம் சுட்டிக்காட்டுகிறார்.


**பொருளாதார ஆலோசகர் கருத்து!**

இந்தியாவின் இரண்டாவது பெரிய மாநிலப் பொருளாதாரமான தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP), 2024-25 ஆம் ஆண்டில் ரூ. 31.19 லட்சம் கோடியாக இருந்த நிலையில், 2025-26 ஆம் ஆண்டில் 35.29 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இதன் பொருள், மாநிலங்களிலேயே மிக வேகமான 13.16% என்ற “வலுவான வளர்ச்சி” விகிதம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதாகும். இது, சமீபத்திய ஆண்டுகளில் தொடர்ந்து அதிகரித்து வரும் பெயரளவு வளர்ச்சி விகிதங்களான 2021-22ல் 15.91%, 2022-23ல் 14.47%, 2023-24ல் 13.34% மற்றும் 2024-25ல் 15.98% ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது என பொருளாதார ஆலோசகர் குறிப்பிடுகிறார்.

பெயரளவு பொருளாதார வளர்ச்சி விகிதம் என்பது பணவீக்கத்தையும் உள்ளடக்கிய ஒன்றாகும். இந்த அம்சம் நீக்கப்பட்டால், அது உண்மையான பொருளாதார வளர்ச்சி விகிதம் என்று அழைக்கப்படுகிறது.

**ஒரு வலுவான மீட்சி!**

கடந்த ஆண்டில் மூன்று துறைகள் குறித்துக் கேட்டபோது, மாநிலத்தின் பொருளாதார விரிவாக்கத்தின் பிரதான உந்துசக்தியான இரண்டாம் நிலைத் துறை கிட்டத்தட்ட 15%



T.N. grows by double digits for second straight year

T. Ramakrishnan

CHENNAI

Tamil Nadu has, for the second consecutive year, recorded double-digit real economic growth. The State has posted a growth rate of 10.83% for 2025-26.

During 2024-25, the figure was 11.19%. The figure for 2025-26 could be the highest for any State, even though the Union Ministry of Statistics and Programme Implementation

Tamil Nadu records double-digit growth for second consecutive year

வளர்ச்சி விகிதத்தையும், சேவைகள் துறை சுமார் 8.5% வளர்ச்சியையும், முதன்மைத் துறை கிட்டத்தட்ட 6% வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளதாக அந்த மூத்த பொருளாதார நிபுணர் பதிலளித்தார். இரண்டாம் நிலை மற்றும் முதன்மைத் துறைகள் இரண்டுமே தேசிய சராசரியை விட அதிக விகிதத்தில் வளர்ந்திருந்தன. இந்த முறை விவசாயத் துறையைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், கடந்த இரண்டு ஆண்டுகளின் எதிர்மறை வளர்ச்சி விகிதத்திலிருந்து (2023-24ல் 1.96% மற்றும் 2024-25ல் 1.83%) ஒரு “குறிப்பிடத்தக்க மாற்றம்” ஏற்பட்டுள்ளது. இத்துறை, 2025-26 காலகட்டத்தில், கிட்டத்தட்ட 9% வளர்ச்சியுடன் “ஒரு வலுவான மீட்சியை” பதிவு செய்துள்ளது.

கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி, மாநிலத்தின் தனிநபர் வருமானம் (தற்போதைய விலையில்) 4.08 லட்சமாக உள்ளது. இது கர்நாடகாவிற்கு (4.33 லட்சம்) அடுத்த இடத்தில் உள்ளது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாடு என்றாலே சாதனை! சாதனை! சாதனை!**

**திராவிட மாடல் தனித்துவமான மாடல்!**

**சொன்னதை, எண்களிலும் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம்!**

**முதல் மூன்றாண்டுகளில் அடித்தளம் அமைத்து, இப்போது தொடர்ந்து இரண்டாண்டுகளாக இரட்டை இலக்க வளர்ச்சி என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளோம். சிறப்பான நமது நிர்வாகத்திற்கு, உழைப்பால் துணை நின்ற தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி!**

**இது தொடக்கம்தான். உங்கள் துணையோடு இன்னும் பல உயரங்களை அடைவது உறுதி!**

**நம்முடைய போட்டி என்பது மற்ற இந்திய மாநிலங்களுடன் அல்ல; தெற்காசியாவில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு உயர வேண்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

### மேற்குவங்கத்தில்

## 142 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு!

*கொல்கத்தா, ஏப். 29 -*

மேற்குவங்கத்தில் 2வது மற்றும் கடைசிகட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று முன்தினம் மாலையுடன் நிறைவடைந்தது. 142 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மேற்குவங்க சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறும் நிலையில், முதற்கட்டமாக கடந்த 23ம் தேதி 152 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்று முடிந்தது. மீதமுள்ள 142 தொகுதிகளுக்கு இரண்டாம் கட்டமாக இன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. தேர்தலில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. கட்சிகளுக்கு இடையே கடும் போட்டி நிலவி வரும் நிலையில், இரு கட்சிகளும் போட்டிபோட்டு பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன. இந்நிலையில், 2வது மற்றும் இறுதிக்கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று முன்தினம் மாலையுடன் நிறைவடைந்தது.

---

### மேற்காசியாவில்

## அமைதியை நிலைநாட்ட ரஷ்யா முயற்சி!

*மாஸ்கோ, ஏப். 29 -*

கடந்த பிப்.28ம் தேதி ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து தாக்குதல் மேற்கொண்டன. அதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடாவில் உள்ள அமெரிக்க நேச நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இதோடு ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியது. இதனால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இந்தச் சூழலில் ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி, ரஷ்யா பயணித்துள்ளார். அங்கு அந்நாட்டு அதிபர் புதினை அவர் சந்தித்தார். இந்தப் போரில் தங்களுக்கு ஆதரவாக ரஷ்யா இருப்பதற்கு புதினிடம் அரக்சி நன்றி தெரிவித்தார். “மேற்காசியாவில் அமைதியை விரைந்து உறுதி செய்ய எங்கள் அதிகாரத்துக்கு உட்பட்ட அனைத்தையும் செய்ய ரஷ்யா தயாராக உள்ளது” என்று அப்போது புதின் தெரிவித்துள்ளார். இதை ரஷ்ய அரசு செய்தி நிறுவனம் உறுதி செய்துள்ளார்.

---

### சென்னை பல்கலைக் கழகத்தில்

## சுற்றுச்சூழல் மேலாண்மை புதிய படிப்பு அறிமுகம்!

### வரும் கல்வி ஆண்டில் அமலாகிறது!

சென்னை, ஏப். 29 -

சென்னை பல்கலைக்கழக நிலத்தியல் (ஜியாலஜி) துறையின் தலைவர் எம்.சுரேஷ் காந்தி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை பல்கலைக்கழக கிண்டி வளாகத்தில் இயங்கி வரும் நிலத்தியல் துறை, நீடித்த ஆதார திட்டமிடல் மற்றும் மேலாண்மைக்கான புவி அறிவியல் முறைகள் என்ற புதிய டிப்ளமா படிப்பை (Diploma in Geoscientific Methods for Sustainable Resource Planning and Management) வரும் கல்வி ஆண்டில் (2026 - 2027) அறிமுகப்படுத்துகிறது.

சுயநிதி அடிப்படையில் தொடங்கப்படும் இந்த படிப்பானது வளர்ந்து வரும் துறையான சுற்றுச்சூழல் மற்றும் ஆதார மேலாண்மையில் ஆராய்ச்சி திறன்களை வலுப்படுத்தவும் மாணவர்களின் வேலைவாய்ப்புத்திறனை மேம்படுத்தும் நோக்கிலும் தொடங்கப்படுகிறது.

இந்த ஓராண்டு கால படிப்பில் பி.எஸ்சி, எம்.எஸ்சி. பட்டதாரிகள் சேரலாம். மேலும் பி.டெக். சுற்றுச்சூழல் பொறியியல், சிவில் இன்ஜினீயரிங், பிடெக் ஜியோ இன்பர்மேட்டிக்ஸ், தொலையுணர்வு மற்றும் பயன்பாட்டு அறிவியல் பட்டதாரிகளும் சேர தகுதியுடையவர் ஆவர்.

படிப்புக்கு மொத்தம் 18 கிரெடிட் வழங்கப்படும். மொத்தம் 6 பாடங்கள். 120 மணி நேர வகுப்பறை பாடம் மற்றும் களப்பணி, செய்முறை பணி ஆகியவற்றை உள்ளடக்கியது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

---

### சென்னை உயர்நீதிமன்றத்தில் 23 நீதிபதி காலிப் பணியிடங்களை

## சமூக நீதி அடிப்படையில் நிரப்ப வேண்டும்!

### குடியரசுத் தலைவருக்கு மனு அனுப்ப வழக்கறிஞர்கள் முடிவு!

*சென்னை, ஏப். 29 -*

சென்னை உயர் நீதிமன்றத்தில் நீண்ட காலமாக காலியாக உள்ள 23 நீதிபதி பணியிடங்களை சமூக நீதி அடிப்படையில் விரைவில் நிரப்ப வேண்டும் என வழக்கறிஞர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞரும், தமிழ்நாடு புதுச்சேரி பார் கவுன்சில் உறுப்பினருமான எம்.வேல்முருகன் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

நாடு முழுவதும் 300க்கும் மேற்பட்ட நீதிபதி பணியிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் காலியாக உள்ளன.

இந்தச் சூழலில், சென்னை உயர் நீதிமன்றத்தில் புதிய நீதிபதிகளை நியமிக்க ஏற்கெனவே 24 பேர் கொண்ட பட்டியல் உச்ச நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டும், இது வரை பரிசீலிக்கப்படவில்லை.

இதனால், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகளின் தேக்கம் அதிகரித்து நீதிபதிகளுக்கு பணிச்சுமை அதிகரித்துள்ளது.

வழக்குகளை மீண்டும் பட்டியலுக்கு கொண்டுவர முடியாமல் வழக்கறிஞர்கள் சிரமத்துக்கு ஆளாகின்றனர். இதனால் வழக்காடிகள் வேதனையடைந்து, நீதித் துறை மீதான நம்பிக்கையை இழக்கின்றனர்.

பணியில் உள்ள நீதிபதிகள் எப்போது ஓய்வு பெறுவார்கள் என்பது முன்கூட்டியே தெரியும் நிலையில், அதை கணக்கிட்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் காலியாக உள்ள 23 நீதிபதிகள் பணியிடங்களையும் சமூக நீதியின் அடிப்படையில் விரைவாக நிரப்ப உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியும், மத்திய சட்ட அமைச்சகமும், குடியரசுத் தலைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதொடர்பாக அனைத்து வழக்கறிஞர்களும் கையெழுத்திட்ட கோரிக்கை மனு குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.